முருகப்பெருமான் துணை

**மகான் கலிய நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.02.2023, செவ்வாய்கிழமை

1. ஞானிகளை வணங்கும் மார்க்கமாக
ஞாலமதில் சன்மார்க்கம் விதைத்து
ஞானிகளை படைக்கவந்த நல்
ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது சால் திங்கள்
வரங்களென உபய திகதி குசன்வாரம்
(சுபகிருது வருடம் மாசி மாதம் 02 ம் நாள் 14.02.2023, செவ்வாய்கிழமை)
வழங்குவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை கலிய நாயனார் யானும்
அருளுவேன் உலகோர் வளம்பெற
வாசி வென்ற ஞானவான்களாக
வாழும் காலமே மாற்றும்வகை
4. வகையாக ஞானம் தருகின்ற
வாழும் ஞானி அரங்கமகான்
மிகையான அன்னதான வழியை
முன்மொழிந்து ஏற்று நடத்தி
5. நடத்தியே தயவை பெருக்கி
நாமசெபமாக ஞானிகள் பேரினை
தடையற நித்தம் பூசையாக
தரணியோர் செய்து வருக
6. வருகவே கரும வினையோடு
வதையான மாயை அல்லலும்
வருமுலகில் தொடரா விலகி
வடிவேலன் அனுகூலம் பெரும் வண்ணம்
7. வண்ணமுடன் ஞானவான்களாகி
வாசி வசமாகும் தானாக
அண்ணல் தரும் சடாட்சர தீட்சை
ஆசிபலமாக சக்தி கூடியே
8. கூடியே குவலயத்தினை காக்கும்
கும்பமுனி முதலான ஞானிகள்
தேடிவந்து அனுகூலம் தரும்படி
தெய்வநிலை தேறி உலகோர்
9. உலகோர் அரங்கன் தேடலில்
உயர்ந்து சகல வகையும்
இலகுவாய் தேறி மாற்றம்
இவ்வுலகில் கண்டடைந்து

10. அடைந்துமே ஞானிகளாவர்
அரங்கமகான் வந்தநோக்கம்
தடையற சித்திக்கும் வண்ணம்
தரும தயவு நெறி காத்து

11. காத்து உலகமாற்றம் தனை
கந்தவேலன் தயவு ஆசிபட
உத்தமமாய் நடத்தி முடிப்பர்
உரைத்திட்ட அனுகூல ஆசி முற்றே

–சுபம்–